**வயலப்பாடியில் வயல்வெளி விழா**

First Published : 19 Mar 2011 12:22:39 PM IST

பெரம்பலூர், மார்ச் 18: பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள வயலப்பாடி கிராமத்தில் வயல்வெளி விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில், பருத்தி மினி மிஷன் திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த விழாவுக்கு தலைமை வகித்து, வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுனர் சி. சங்கர் பேசியது:

வயல்வெளிப் பள்ளி மூலம் விவசயிகள் நவீன தொழில் நுட்பங்களை அறிந்துகொண்டு பருத்தியில் அதிக மகசூல் காணலாம் என்றார் அவர்.

விழாவில் பங்கேற்ற வயல்வெளி பள்ளி விவசாயிகளும், முன்னோடி விவசாயிகளும் தொழில்நுட்பக் கருத்துகளைக் கேட்டறிந்தனர்.

விழாவில் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து உள்பட நூற்றுக்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, தொழில்நுட்ப வல்லுனர் சி. கதிரவன் வரவேற்றார். களப்ணியாளர் கொளஞ்சி நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை முதுநிலை ஆராய்ச்சியாளர் சரவணன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**"ராஜராஜன்-1000' சாகுபடியில் நடைமுறை சிக்கல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2011,01:06 IST

வெள்ளகோவில்: நடைமுறை சிக்கல் ஏற்பட்டுள்ளதையடுத்து, 'ராஜராஜன்-1000' சாகுபடி முறையை வெள்ளகோவில் பகுதி விவசாயிகள் கைவிடும் நிலை உள்ளது. குறைந்த செலவு, அதிக விளைச்சல் தருவதாக "ராஜராஜன்-1000' நெல் சாகுபடி உள்ளது. இச்சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு மானியம் வழங்கி வருகிறது. வெள்ளகோவில் வட்டாரத்தில் வெள்ளகோவில், வாய்க்கால்மேட்டுவலசு, முத்தூர் பகுதிகளை சேர்ந்த 25 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, ஆயிரம் ஏக்கரில் செயல்விளக்க திடலில் புதிய முறையில் நெல் பயிரிட்டனர்.

ஒரு ஹெக்டேர் நிலத்தில் ராஜராஜன் முறையில் சாகுபடி செய்த விவசாயிக்கு, வேளாண் துறை 3,000 ரூபாய் மானியம் வழங்கியது. மற்ற பயிர்களை விட, அதிகளவு பக்க தூர்பிடித்து, கூடுதல் நெல்மணிகள் விளைந்தன; விவசாயிகளுக்கு நல்ல மகசூல் கிடைத்தது. ஆனால், நடவுமுறைகளை பின்பற்றுவதில் சிக்கல் ஏற்படுவதால், வெள்ளகோவில் பகுதி விவசாயிகளிடம் "ராஜராஜன்-1000' சாகுபடி ஆர்வம் குறைந்துள்ளது.

ராஜராஜன் சாகுபடி விவசாயிகள் கூறியதாவது: "ராஜராஜன்-1000' சாகுபடிமுறையில் அதிகளவு மகசூல் கிடைக்கிறது. ஆகஸ்ட் 15ல் கீழ்பவானி பாசனநீர் கிடைத்தால் மட்டுமே, நாற்றங்காலில் இருந்து எடுத்து 15வது நாளில் நடவு செய்ய முடியும். இல்லையெனில், நடவு தள்ளிப்போகும்; நாற்றங்காலில் அதிக நாள் வைத்திருந்தால், மகசூல் பாதிப்புக்கு அதுவே அடித்தளமாக அமைந்துவிடும்.

நிலத்தை பண்படுத்தி மார்க்கர் கருவியை உருட்டும்போது, தடம் பதிவதில்லை. இதனால், குறுக்கும் நெடுக்குமாக கயிறு பிடித்து நடவுசெய்யவேண்டியுள்ளது. ஒருவரிசை நட்டபின், மீண்டும் அடுத்தவரிசைக்கு கயிற்றை மாற்றி அளவுபடி வைத்து நடவேண்டும். சாதாரண நடவில் குனிந்துகொண்டே நாற்று நட்டு சென்று விடுவதால், பெண்களுக்கு அலுப்பு தெரிவதில்லை. கயிறு கட்டி நடவு செய்யும்போது அடிக்கடி குனிந்து நிமிர வேண்டியுள்ளதால், பெண்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். களை பறிக்கவும், பக்கவேர்களை வெட்டவும் "கோனா வீடர்' கருவியை உருட்டவேண்டும்.

கருவியை உருட்டும்போது, பக்கவேர்கள் வெட்டப்படுகின்றன என்றாலும், களைகள் முழுவதுமாக நிலத்தினுள் புதைந்து விடுவதில்லை. எஞ்சும் களையை கையால் அகற்ற வேண்டியுள்ளது; இல்லையெனில், களைகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துவிடுகின்றன. ஏற்கனவே விவசாயத்துக்கு ஆள்பற்றாக்குறை ஏற்பட்டுவரும் நிலையில், இப்புதிய நடவு முறையை கையாள்வதில் சிரமம் ஏற்படுகிறது. அதிக கூலி கொடுத்தாலும், ராஜராஜன் நடவில் உள்ள சிக்கல்களால், தொழிலாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர், என்றனர்.

**புதர்கள் நிறைந்த மூலிகை தோட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2011,23:16 IST

தாடிக்கொம்பு : தாடிக்கொம்பு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மூலிகை தோட்டம் புதர்கள் நிறைந்து காணப்படுகிறது. தாடிக்கொம்பு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, 24 மணி நேர ஆஸ்பத்திரியாக தரம் உயர்த்தப்பட்டபோது, சித்தா பிரிவின் மூலம் ஆஸ்பத்திரி வளாகத்தில் மூலிகை செடிகள் நடப்பட்டன. முறையான பராமரிப்பு இல்லாததால், புதர்கள் நிறைந்து செடிகளின் பெயர் பலகைகள் மட்டுமே உள்ளன. புதர்களை அகற்றி மூலிகை தோட்டத்தை பராமரிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தாடிக்கொம்பு வட்டார மருத்துவ அலுவலர் பகவதி கூறுகையில்: "மூலிகை தோட்டத்திற்கு இரு புறமும் உள்ள குடியிருப்பு கட்டிடங்கள் முழுவதுமாக அகற்றப்பட்டு, புது கட்டிடம் கட்டப்பட உள்ளது. பொதுப் பணித் துறையினர் கடந்த 20 நாட்களுக்கு முன்பு கட்டங்களை பார்வையிட்டு சென்றனர். எனவே தற்காலிகமாக மூலிகை தோட்டம் பராமரிக்கபடாமல் உள்ளது. புது கட்டிடங்களின் கட்டுமான பணிகள் முடிந்தவுடன், மூலிகை மீண்டும் புதுப்பிக்கப்படும்', என்றார். கை எடுக்க வேண்டும்.

**கோடை காலத்தில் வனவிலங்குகளை காக்க வனத்துறையினர் நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2011,23:45 IST

கம்பம் : கோடைகாலங்களில் வனவிலங்குகளுக்கு வனப்பகுதிகளில் குடிநீர் கிடைக்க தற்காலிக ஏற்பாடுகள் செய்ய வனத்துறையினர் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். வனவிலங்குகள் எண்ணிக்கை சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் திருப்திகரமாக இல்லை. குறிப்பிட்ட ஒரு சில இனங்களை தவிர பெரிய அளவில் மாற்றம் இல்லை. காரணம் வனவிலங்குகள் நடமாட்டத்திற்கு தேவையான வசதிகள் குறையும் போது, வனவிலங்குகள் இடம் பெயரும். உதாரணத்திற்கு புலிகளுக்கு மிலா மான்கள் உணவாக பயன்படும்.

மிலா மான்களுக்கு புல்வெளிகள் வேண்டும். கோடைகாலங்களில் புல்வெளிகள் வறண்டு போகும். அப்போது மிலா மான்கள் இடம் பெயரும். மிலா மான்கள் இடம் பெயரும் போது, புலிகளும் இடம் பெயரும். இது போன்று ஒவ்வொரு வனவிலங்கும் ஒன்றையொன்ற சார்ந்துள்ளது. கோடைகாலங்களில் வனப்பகுதிகளில் வனவிலங்குகளுக்கு குடிநீர் பெரிய பிரச்னையாக இருக்கும். குறிப்பாக கோடைகாலங்களில் காட்டு ஓடைகளில் தண்ணீர் வற்றிப் போகும். குடிநீருக்காக மான்கள், யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகள் ஊருக்குள் வந்து விடுகிறது. வனப்பகுதிகளில் யானைகள் மற்றும் வனவிலங்குகளுக்கு குடிநீர் கிடைக்க தற்காலிக ஏற்பாடுகள் செய்ய வனத்துறையினர் தற்போது தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். ஏற்கெனவே வனப்பகுதியில் செயற்கையாக குளங்கள் வெட்டி வைக்கப்பட்டுள்ளது. இந்த குளங்களில் தண்ணீரை லாரிகளில் கொண்டு சென்று ஊற்றவும் அல்லது தண்ணீர் ஊற்று உள்ள இடங்களில் பள்ளம் வெட்டி தண்ணீரை தேக்கி வனவிலங்குகள் குடிப்பதற்கு வசதி செய்யவும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த நடவடிக்கையால் வனவிலங்குகளின் தண்ணீர் பிரச்னை தீர்க்கப்படும். வனத்துறையினர் கூறியதாவது: குமுளி முதல் தேனி வரை ரோட்டின் கிழக்கு பக்கம் உள்ள வனப்பகுதிகள் வனவிலங்கு சரணாலயங்களாக மாற்றப்பட்டுவிட்டது. எனவே வனவிலங்குகளுக்கு தண்ணீர் பிரச்னை இல்லாமல் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறோம். கோடைகாலங்களில் வனப்பகுதியில் தீ தடுப்பு என்பது பெரிய பணியாகும். அதைவிட வனவிலங்குகளின் குடிநீர் பிரச்னை முக்கியாக கருதப்படுகிறது. அதற்காக தண்ணீர் ஊற்று உள்ள இடங்களில் பள்ளம் தோண்டி தண்ணீரை தேக்கும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம் என்றனர்.

**கரும்பு சாகுபடியில் தொழில்நுட்பம்: வேளாண் துறை தகவல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,23:38 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் முன் பருவ கரும்பு சாகுபடி துவங்க உள்ள நிலையில் கரும்பு சாகுபடியில் செம்மை கரும்பு சாகுபடி தொழில் நுட்பத்தை விவசாயிகள் பின்பற்றி அதிக மகசூல் பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தர்மபுரி உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில் 25,000 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, அரூர் சுப்பிரமணிய சிவ கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய சர்க்கரை ஆலையைத் தவிர தனியார் வெல்லம் தயாரிக்கும் தொழிற்சாலை இந்த கரும்பால் பயனடைகின்றனர். கோடை சீசன் துவங்கியுள்ளதால், கரும்பு ஜூஸ் மற்றும் குளுகோஸ் உள்ளிட்ட உபரி தொழிலுக்கு கரும்பு தேவை அதிகரித்துள்ளது.

செம்மை கரும்பு சாகுபடி முறை மூலம் உற்பத்தி செய்யும் கரும்புகளுக்கு மற்ற மாவட்டங்களில் வழங்கப்படும் விலையை விட தர்மபுரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் கரும்புக்கு சர்க்கரை ஆலைகள் கூடுதல் விலை நிர்ணயித்து வருகிறது. பருவ நிலை மாற்றங்கள், முறையற்ற சாகுபடி முறைகள், பூச்சிநோய் தாக்குதலால் சாதாரண கரும்பு சாகுபடி முறைகள் தொடர்ந்து பாதிப்படைந்து வரும் நிலையில் செம்மை கரும்பு சாகுபடி மூலம் விவசாயிகள் சராசரியாக ஏக்கருக்கு 40 முதல் 50 மெட்ரிக் டன்னுக்கு மேல் மகசூல் பெறமுடியும்.

செம்மை கரும்பு சாகுபடி முறையில் ஒரு விதைப்பரு சீவல்களிலிருந்து நாற்றங்கால் அமைத்தல், இளம் நாற்றுகளை எடுத்து நடவு செய்தல், அதிக இடைவெளியில் நடவு செய்தல், தேவையான அளவு மட்டும் நீர்பாய்ச்சுதல், இயற்கை சார்ந்த உரங்கள் பயிர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு முறைகளுக்கு போதிய அளவு முக்கியத்துவம் அளித்தல், ஊடுபயிர் சாகுபடி மூலம் மண் வளம் மற்றும் மகசூல் அதிகரித்தல் ஆகியவற்றை பயன்படுத்தி செம்மை கரும்பு சாகுபடி செய்யலாம்.

இதில், பயன்படுத்தப்படும் நாற்றங்காலில் சாதாரணமாக கரும்பு நடவுக்கு இரண்டு அல்லது மூன்று பருவ விதைக்கரணைகள் பயன்படுத்தப்படுவதை தவிர்த்து செம்மை கரும்பு சாகுபடி முறையில் ஒரு விதைப்பருவை கரும்பில் இருந்து அரைவட்ட வடிவில் வெட்டி எடுத்து தரமான சீவல்களை கொண்டு "பரோடிரே' எனப்படும் குழித்தட்டுகளில் மக்கிய தென்னை நார்கழிவை பயன்படுத்தி நாற்றங்கால் அமைக்கப்படுகிறது. இதன் மூலம் அதிகளவு முளைப்புத்திறனை குறைந்த நாட்களில் அடைய முடிகிறது.
நாற்றங்காலில் நாற்றுகள் 25 முதல் 30 நாட்கள் வயது அடைந்தவுடன் வேர்ப்பகுதியில் உள்ள தென்னைநார் கழிவுடன் சேர்த்து நடவு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**சின்ன வெங்காயம் கொள்முதல் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,23:19 IST

பல்லடம்: கர்நாடகத்தில் இருந்து சின்ன வெங்காயம் வரத்து அதிகரிப்பு காரண மாக, ஒரே வாரத்தில் உள்ளூர் சின்ன வெங்காயம் கொள்முதல் விலை கிலோவுக்கு ஐந்து ரூபாய் சரிந்தது.
பல்லடம் பகுதியில் மந்திரிபாளையம், ஜல்லிப்பட்டி, குள்ளம்பாளையம், வாவிபாளையம், மானாசி பாளையம், கேத்தனூர் உட்பட பல இடங்களில் 3,000 ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு, தற்போது அறுவடை நடந்து வருகிறது. இப்பகுதி விவசாயிகளிடம் இரு வாரத்துக்கு முன், ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.15க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

இவ்விலை, ஓரளவு கட்டுப்படியானதாக இருந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.கடந்த ஒரு வாரமாக கர்நாடகத்தில் இருந்து கோவை, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய பகுதிகளுக்கு சின்ன வெங்காயம் வரத்து அதிகரித்து வருகிறது. இதன் எதிரொலியாக உள்ளூர் சின்ன வெங்காயம் கொள்முதல் விலை ஐந்து ரூபாய் சரிந்துள்ளது. ஒரே வாரத்தில் கொள்முதல் விலை சரிவு, பல்லடம் பகுதி சின்ன வெங்காய விவசாயிகளை கண் ணீர் விடும் நிலைக்கு தள்ளியுள்ளது.சின்ன வெங்காயம் விவசாயி பழனிசாமி கூறுகையில்,""ஒரு ஏக்கர் சின்ன வெங்காயம் சாகுபடி செய்து அறுவடை

செய்ய ரூ.35 ஆயிரம் வரை செலவாகிறது. நல்ல முறையில் மகசூல் கிடைத்தால் ஏக்கருக்கு எட்டு டன் மகசூல் கிடைக்கும்.

இரு வாரத்துக்கு முன் வெங்காயம் கிலோ ரூ.15 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது, பெங்களூரூ, மைசூர் போன்ற பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயம், தமிழகத்தின் பகுதிகளுக்கு வந்துள்ளதால் கொள்முதல் விலை கடந்த ஒருவாரமாக ரூ.10 ஆக உள்ளது.வெங்காய அறுவடைக்கு கொடுக்கப்படும் கூலி பெண்களுக்கு 150 ரூபாய், ஆண்களுக்கு 220 ரூபாய். கடந்த ஆண்டு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் செலவானது. இந்தாண்டு கூலி உயர்வு, விதை வெங்காயம் விலை உயர்வு உள்ளிட்டவை காரணமாக ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் செலவாகி உள்ளது. இவ்விலை, பெரிய அளவில் வருமானத்தை தராது. வெங்காயத்துக்கு குறைந்த பட்சம் கொள்முதல் விலையாக கிலோவுக்கு ரூ.15 கிடைத்தால் மட்டுமே தொடர்ந்து வெங்காய சாகுபடியில் ஆர்வம் காட்ட முடியும்," என்றார்.

**காலி பிளவர் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 18,2011,23:18 IST

பொங்கலூர்: பொங்கலூர் பகுதியில் தக்காளி, வெங்காயம் ஆகிய காய்கறிகளுக்கு அடுத்தபடியாக காலி பிளவர் சாகுபடியில் நூற்றுக்கணக்கான விவ சாயிகள் ஈடுபட்டுள்ளனர்.காட்டூர், வாவிபாளையம், கண்டியன்கோவில், உகாயனூர், வெள்ளநத்தம், கெங்கநாயக்கன்பாளையம், கொடுவாய் போன்ற பகுதிகளில் காலி பிளவர் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.
காலி பிளவர் பூக்களுக்கு கடந்த நான்கு மாதமாக நல்ல விலை கிடைத்து வந்தது.

இதனால், பல விவசாயிகள் ஆர்வத்துடன் காலி பிளவர் சாகுபடியில் ஈடுபட்டனர். ஒரு பூ 20 ரூபாய்க்கு விற்ற நிலை மாறி, தற்போது, ஒரு பூ இரண்டு ரூபாய்க்கு விற்கிறது. இதனால், விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.விவசாயிகள் கூறுகையில், "கடந்த ஆடிப்பட்டத்தில் மழை அதிகம் பெய்ததால், பூக்கள் நன்கு வளரவில்லை. முக்கால் பங்கு செடிகள் அழுகின.

அதனால், நல்ல விலை கிடைத்தும் லாபம் ஈட்ட முடியவில்லை. தற்போது நல்ல விளைச்சல் கிடைத்தும் விலை சரிந்து விட்டதால், நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஒரு ஏக்கர்

சாகுபடி செய்ய 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. நாற்று நடவு, களையெடுப்பு, உரம், மருந்து, அறுவடை கூலி போன்றவை அதிகரித்துள்ள சூழலில், பூக்கள் விலை கடுமையாக சரிவு அடைந்துள்ளது. இதனால், நஷ்டம் ஏற்பட்டுள்ளது,' என்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# சூரியகாந்தி பூ குறித்து மாணவிகள் ஆய்வு



கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் சூரியகாந்தி மலர்கள் பூத்துகுலுங்குகின்றன. இந்த மலர்களை தோட்டக்கலைத்துறை மாணவிகள் ஆராய்ச்சி படிப்புக்காக அதன் வளர்ச்சி மற்றும் விதையின் தரம் பற்றி ஆய்வு செய்வதை படத்தில் காணலாம்.